**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 68/2017 PW- 1**

Name : Mangai
Father / Husband name : Velayutham
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 28.08.2024.
Appearance of accused 1 and 2 is dispensed. Accused counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டிவனம், காவேரிபாக்கம், புது தெருவில் வசித்து வருகிறேன். தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. இதற்கு முன்பு வேளான் துறையில் கண்காணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்று இருந்து வருகிறேன். சாட்சி சங்கர் என்பவர் தேவராஜின் தம்பி என்று நினைக்கிறேன். சாட்சி செல்வம் என்பவரை எனக்கு தெரியவில்லை. சாட்சிகன் சண்முகம், ராமலிங்கம் ஆகியோர்கள் எனது நிலத்தின் பக்கத்து நிலத்துக்காரர்கள். சாட்சி தமிழ்செல்வம் என்பவரை எனக்கு தெரியவில்லை. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். நான் கடலூர் வேளான் துறையில் 06.11.1991 ல் வேலை செய்துக்கொண்டிருந்த போது தேவராஜை எனது கணவர் அழைத்து வந்தார். எனக்கு திண்டிவனம் புறவழி சாலையில் சர்வே எண். 87/5, 6, 7, 8 ஆகியவற்றில் மொத்த விஸ்திரனம் 67 செண்ட் நிலம் உள்ளது. அந்த நிலத்தை தேவராஜக்கு விற்பனை செய்வதற்காக தான் எனது கணவர் கடலூர் பதிவு அலுவலகத்திற்கு அழைத்து வந்தார். அன்றைய தினம் தேவராஜ் பதிவு அலுவலகத்திற்கு வந்தவுடன் அவர் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த power of attornery ல் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார். **(அந்த ஆவணமான 06.11.1991 தேதியிட்ட power of attorney அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** அதன் பின்னர் எனக்கு சொந்தமான 67 செண்ட் நிலத்தை 1,84,250/- ரூபாய்க்கு கிரையம் பேசி முன் பணமாக 50,000/- ரூபாய் கொடுத்து கிரைய அச்சார உடன் படிக்கை பதிவு செய்யப்பட்டது. அந்த அச்சார உடன் படிக்கையில்

மீதி கிரைய தொகையை 3 மாதத்தில் கொடுப்பதாக அதில் எழுதப்பட்டுள்ளது. மூன்று மாதங்கள் கழித்து மீதி கிரைய தொகையை எதிரி தேவராஜ் கொடுக்காததால் வழக்கறிஞரின் மூலமாக அறிவிப்பு அனுப்பி இருந்தேன். அதற்கு பதில் எதுவும் அவர் தரப்பில் கொடுக்கவில்லை. அதன் பின்னர் மீண்டும் வழக்கறிஞரின் மூலமாக அறிவிப்பு எதிரி தேவராஜிக்கு நான் அனுப்பி இருந்தேன். அந்த அறிவிப்புக்கு தேவராஜ் தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பட்டது. அதில் மீத கிரைய தொகை மூன்று மாத காலகெடுவிற்கு முன்னரே கொடுத்துவிட்டதாக குறிப்பிட்டு இருந்தார்கள். அதன் பின்னர் எதிரி தேவராஜ் என்னிடம் கிரைய உடன் படிக்கை செய்யப்பட்ட இடத்தை அவருடைய மனைவி வைதேகி என்பவரின் பெயருக்கு 14.11.1991 அன்றே ரூபாய் 17,000/-க்கு கிரையம் செய்துவிட்டது தெரியவந்தது. (**அந்த 14.11.1991 தேதியிட்ட கிரைய பத்திரம் அ.சா. ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதன் பின்னர் திண்டிவனம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு கொடுத்தேன். அந்த வழக்கில் அவர் கிரைய அச்சார மீதி தொகையை முன்னதாகவே செலுத்திவிட்டதாகவே நீதிமன்றத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கப்பட்ட உடன் படிக்கையில் எழுதி தாக்கல் செய்திருந்தார். அவர் எழுதப்பட்டு இருந்தது மோசடியாக எழுதப்பட்டு இருந்ததால் நீதிதமன்றத்தின் வாயிலாகவே அந்த உடன் படிக்கை பத்திரம் தடவியல் துறைக்கு அனுப்பப்பட்டு இருந்தது. அந்த அச்சார உடன் படிக்கையில் அச்சார மீதி தொகையை செலுத்திவிட்டதாக எழுதப்பட்டு இருந்ததில் போடப்பட்ட கையெழுத்து மோசடியாக போட்டப்பட்டது என்று அறிக்கை வந்துவிட்டது. அதன் பின்னர் நான் விழுப்புரம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அந்த மோசடி குறித்து நடவடிக்கை எடுக்குபடி அந்த உத்தரவுகளை நான் அனுப்பி வைத்திருந்தேன். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் பின்னர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு எண். 522/2004 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர் அந்த உத்தரவின் பேரில் சார்பு நீதிமன்றத்தில் நான் மேல் முறையீடு செய்து

இருந்தேன். 2015 வருடம் மீண்டும் உயர் நீதிமன்றத்தில் மனு செய்து காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நான் கொடுத்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்க உத்தரவு வாங்கியிருந்தேன். அந்த உத்தரவின் அடிப்படையில் இரண்டு மாதங்கள் கழித்து தேவராஜ், வைதேகி ஆகியோர்களின் மீது விழுப்புரம், மாவட்ட குற்ற பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் மனு விழுப்புரம் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(வாதியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா. ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. மேற்படி கிரைய அச்சார உடன்படிக்கை ஆவணத்தின் சான்றிட்ட நகல் குறியீடு செய்ய ஒத்திவைக்கப்படுகிறது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1, திண்டிவனம்.